**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**<u>OS No.1/2021</u>**

2023-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Chief Examination of PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்பையன் | தந்தை பெயர் | குட்டையகோனார் |
| கிராமம் | வல்லவராயன்பட்டி | தாலுகா | கந்தர்வகோட்டை |
| சமயம் | இந்து | ஜாதி | |
| வயது | 77 | தொழில் | விவசாயம் |

நாள் : 17.08.2023
வா.சா.1

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் வாதி. நான் என் சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அதில் உள்ள விவரங்கள் நான் சொன்னவை தான். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். என் வழக்கிற்காக ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன்.

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணங்கள்** | **அசல்/நகல்** | **குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள்** |
|---|---|---|---|---|
| 1 | 13.05.1994 | வாதியாகிய எனக்கும், பிரதிவாதி ராமசந்திரனுக்கும் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரம் | அசல் | வா.சா.ஆ.1 |
| 2 | 30.05.1974 | என் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் (Doc No.898/1974) | அசல் | வா.சா.ஆ.2 |
| 3 | 28.05.1981 | என் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் (Doc No.726/1981) | அசல் | வா.சா.ஆ.3 |
| 4 | 28.05.1981 | என் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் (Doc No.725/1981) | அசல் | வா.சா.ஆ.4 |
| 5 | 14.05.1981 | என் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் (Doc No.625/1981) | அசல் | வா.சா.ஆ.5 |
| 6 | 07.08.2009 | தாவா சொத்திற்கு உண்டான அடங்கல் கணக்கு | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.6 |
| 7 | | தாவா சொத்திற்கு உரிய பட்டா எண்.1333 க்கான கணினி சிட்டா | கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.7 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | | தாவா சொத்திற்கு உரிய பட்டா எண்.1333 க்கான நான் செலுத்திய வரி ரசீதுகள் எண்ணிக்கை 3 | அசல் | வா.சா.ஆ.8 |
| 9 | 17.06.2020 | தாவா சொத்திற்குரிய வில்லங்க சான்று | கணினி பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.9 |
| 10 | 25.12.2020 | கந்தர்வகோட்டை காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் மனு | அலுவலக நகல் | வா.சா.ஆ.10 |
| 11 | | பட்டா எண்.170 க்கு பிரதிவாதி மற்றும் என் பெயரில் உள்ள UDR ல் ஏற்பட்ட கூட்டுபட்டா | அசல் | வா.சா.ஆ.11 |
| 12 | 29.12.2020 | தாவா சொத்திற்கான என் பெயரிலான அடங்கல் கணக்கு | சான்றிட்ட நகல் | வா.சா.ஆ.12 |
| 13 | 04.04.2021 | தாவா சொத்திற்கான என் பெயரிலான வரி ரசீது | அசல் | வா.சா.ஆ.13 |
| 14 | 31.03.2020 | தாவா சொத்திற்கான என் பெயரிலான பட்டா மாறுதல் உத்தரவு | அசல் | வா.சா.ஆ.14 |
| 15 | 07.02.2001 | தாவா சொத்திற்கான என் பெயரிலான வரி ரசீது | அசல் | வா.சா.ஆ.15 |
| 16 | 29.01.2002 | தாவா சொத்திற்கான என் பெயரிலான வரி ரசீது | அசல் | வா.சா.ஆ.16 |
| 17 | 23.11.2022 | தாவா சொத்திற்கான என் பெயரிலான வரி ரசீது | அசல் | வா.சா.ஆ.17 |

வா.சா.ஆ.6 ஆன அடங்கல் கணக்கில் பசலி மற்றும் மாவட்ட விவரங்கள் எதுவும் காணப்படவில்லை என்றும், எனவே இதனை குறியீடு செய்வதற்கு தகுந்த ஆவணம் இல்லை என்று ஆட்சேபனை செய்யப்பட்டது, வாதி தரப்பில் பசலி கணக்கினை ஒரு போகம் அல்லது இரு போகம் என்ற குறிப்பில் குறிப்பிட்டுள்ளனர் என்றும், எனவே அது முறையான ஆவணம் என்று எடுத்து உரைக்கப்பட்டது. ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

வா.சா.ஆ.10 ஆனது நகல் ஆவணம் எனப்தாலும், மனு ரசீது மற்றும் மனு ஏற்பு ரசீது எதுவும் தாக்கல் செய்யப்படாததால், இதனை குறியீடு செய்வதற்கு தகுந்த ஆவணம் இல்லை என்று ஆட்சேபனை செய்யப்பட்டது, ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

வா.சா.ஆ.9 ஆன வில்லங்க சான்றில் எவ்வித QR குறியீடும், அல்லது சான்றொப்பமும் இல்லை என்பதால், இதனை குறியீடு செய்வதற்கு தகுந்த ஆவணம் இல்லை என்று ஆட்சேபனை செய்யப்பட்டது, ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.